# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.68/2019 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா- 01 ( PW- 01 ) |
| பெயர் | :- | சரவணன் |
| தேதி | :- | 07-10-2025 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி:-**

பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் என்ன சொல்லி -யுள்ளார் என்று நான் ஏற்கனவே படித்துப் பார்த்தேன். முழுவிவரம் தற்போது எனக்கு நினைவில்லை. முதல்விசாரணையில் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி பத்திரத்தில் பிரதிவாதி எதிர்வழக்குரையில் சொன்ன சங்கதிகளை மறுத்து கூறியுள்ளேனா என்றால் மறுத்து சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு மறுக்கவில்லை என்றும் தற்போது பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

தனலட்சுமிக்கு எழுதப் படிக்க தெரியுமா என்று எனக்குத் தெரியாது. வழக்குச் சொத்து சம்மந்தமாக தனலட்சுமியின் கணவரிடம் பேசினேனா அல்லது மகனிடம் பேசினேனா என்றால் குடும்ப உறுப்பினர்கள் அனைவரிடமும் பேசினேன். விற்பனை ஒப்பந்தத்தில் கண்டுள்ள ஒப்பந்த நீட்டிப்பு வாசகத்தில் எந்த ஒப்பந்தத்தை நீட்டிப்பதாக வாசகம் குறிப்பிட்டு உள்ளதாக என்றால் இல்லை. முதன்மையான ஒப்பந்ததை நீட்டிப்பதாகதான் அர்த்தம். இந்த வழக்கில் உள்ள விற்பனை ஒப்பந்தம் விற்பனைக்கான

ஒப்பந்தம் உண்மையில் ஏற்படவில்லை என்றும் கடனுக்காக ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. காலநீட்டிப்பு ஒப்பந்தமும் கடன் தொகைக்காக எழுதப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு கால தாமத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தூயகரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை என்றால் சரியல்ல. கடனுக்காக ஏற்பட்ட ஒப்பந்ததை பயன்படுத்தி வழக்குச் சொத்தை அபகரிக்க இந்த வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.